# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2019.08.05 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# இலங்கை றுஹுஹுணு பொருளாதார அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

**றுஹுணு அபிவிருத்தி இடப்பரப்பினுள் பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களையும், திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் அல்லது செய்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதனை அடையாளங்காணும், வகுத்தமைக்கும் மற்றும் ஒருங்கிணைக்கும் நோக்கத்துக்காக இலங்கை றுஹுணு பொருளாதார அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தைத் தாபிப்பதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டமூலம்**

*துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 51.00** **தபாற் செலவு : ரூபா 35.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கை றுஹுணு பொருளாதார அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

*ச.வ. - ஒ. 63/2019*

**றுஹுணு அபிவிருத்தி இடப்பரப்பினுள் பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களையும், திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் அல்லது செய்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதனை அடையாளங்காணும், வகுத்தமைக்கும் மற்றும் ஒருங்கிணைக்கும் நோக்கத்துக்காக இலங்கை றுஹுணு பொருளாதார அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தைத் தாபிப்பதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை.*

இலங்கையில் நிலைபெறுதகு பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கு, குறிப்பாக வியாபாரம், ஏற்றுமதிகள், தொழினுட்பவியல், சுற்றுலாப்பயணத்துறை மற்றும் நவீன கமத்தொழில், தொழில் வாய்ப்புக்கள் என்பவற்றில் துரிதமான பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கு றுஹுணு பொருளாதார அபிவிருத்தி பற்றிய தேசியக் கொள்கையை விதிப்பது அவசியமாக வந்துள்ளதாதலாலும்:

அத்துடன் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கத்துக்காகக் கூட்டுத்தாபனமொன்றைத் தாபிப்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்றாக வந்துள்ளதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2019ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை றுஹுணு பொருளாதார அபிவிருத்திக் கூட்டுத்தாபனச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

## இலங்கை றுஹுணு பொருளாதார அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தைத் தாபித்தல்

**2**. (1) (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை றுஹுணு பொருளாதார அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் எனவழைக்கப்படவேண்டியதும் அறியப்பட வேண்டியதுமான கூட்டுத்தாபனமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். *இலங்கை றுஹுணு பொருளாதார அபிவிருத்திக் கூட்டுத் தாபனத்தைத் தாபித்தல்.*

(2) கூட்டுத்தாபனமானது, (1)ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பெயரில் அது வழக்குத்தொடுக்கலாம் மற்றும் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

**3**. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:- *கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள்.*

(அ) 18ஆம் பிரிவின்கீழ் வகுத்தமைக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களையும், திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் அல்லது செய்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதன்மூலம் சர்வதேசரீதியிலான நோக்கைக் கொண்ட போட்டியுள்ள சந்தையினால் உந்தப்பட்ட மற்றும் துரிதமான நிலைபெறுதகு பொருளாதார அபிவிருத்தியை இடப்பரப்பினுள் ஊக்குவிப்பதற்கும்.

(ஆ) ஒரு துறைமுகத்துடனும் வானூர்திநிலையமொன்றுடனும் செயல்நுணுக்க ஏற்பாட்டியல் மையம் ஒன்றை அபிவிருத்திசெய்வதற்கும்;

(இ) பொருளாதார அபிவிருத்தி வலயங்களைத் தாபிப்பதற்கும்; அத்துடன்

(ஈ) பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும்.

கூட்டுத் தாபனத்தின் தத்துவங்களும், பணிகளும், கடமைகளும்.

**4**. அரசியலமைப்பினதும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களும், பணிகளும், கடமைகளும் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) 18ஆம் பிரிவின்கீழ் வகுத்தமைக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கும், திட்டங்களுக்கும், நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் அல்லது செய்திட்டங்களுக்கும் பயன் கொடுப்பதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தளத்தைத் தூண்டுவதற்கும், விசாலிப்பதற்கும், அபிவிருத்திசெய்வதற்கும், பலப்படுத்துவதற்குமான அமைப்புமுறையொன்றை வகுத்தமைப்பதற்கும்;

(ஆ) 18ஆம் பிரிவின்கீழ் வகுத்தமைக்கப்பட்ட எவையேனும் பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களினால், திட்டங்களினால், நிகழ்ச்சித்திட்டங்களினால் அல்லது செய்திட்டங்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக வீதிகள், நீர்வழங்கல், வீடமைப்பு மற்றும் அத்தகைய வேறு வசதிகளும் வாழ்வசதிகளும் உட்பட, பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கும்;

(இ) முன்னுரிமை அடிப்படையில் பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்கள், திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது செய்திட்டங்கள் பற்றி விரிவான ஆய்வுகளை நிறைவேற்றுவதற்கும் மற்றும் பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயங்களுக்காக ஒட்டுமொத்த அபிவிருத்தித்

திட்டத்திலுள்ள பொருளாதார அபிவிருத்திக் கருத் திட்டங்களையும், திட்டங்களையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் அல்லது செய்திட்டங்களையும் அடையாளங்காண்பதற்கும்;

(ஈ) இலங்கையில் உள்ள அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள ஆட்களிடமிருந்து அல்லது ஆட்கள் குழுக்களிடமிருந்து மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளை ஏற்றுக்கொள்வதற்கும்;

(உ) பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்கள்,திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செய்திட்டங்களின் ஆய்வுகளையும், நடைமுறைப்படுத்துகையையும் நிறைவேற்றுவதில், ஒவ்வோர் அமைச்சு, திணைக்களம், மாகாணசபை, மாகாண அமைச்சு மற்றும் திணைக்களம் அத்துடன் உள்ளூரதிகாரசபை என்பவற்றின் இடைமுகவராண்மைகளுக்கும் தனிப்பட்ட அல்லது பகிரங்க வேறு ஆட்களுக்கும் அல்லது ஆட்கள் குழுக்களுக்கும் இடையேயான ஒத்துழைப்பை நிலைநாட்டுவதற்கும் அதிகரிப்பதற்கும்;

(ஊ) பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயங்களிலுள்ள பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களையும், திட்டங்களையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் அல்லது செய்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கும்;

(எ) பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயங்களிலுள்ள பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களினதும், திட்டங்களினதும், நிகழ்ச்சித் திட்டங்களினதும் அல்லது செய்திட்டங்களினதும் விரிவான ஆய்வுகளையும் நடைமுறைப்படுத்துகையையும் நிறைவேற்றுவதில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுத் தனியார்துறை முகவராண்மைகளின் பங்குபற்றுகையைப் பெறுவதற்கும்;

(ஏ) பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயங்களை நிருவகிப்பதற்கும்;

(ஐ) பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயங்களுக்கு வெளியே ஏதேனும் அலுவலகத்தை அல்லது களஞ்சியங்களைப் பேணுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் பணியை அத்தகைய பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயங்களுக்கு வெளியே நிறைவேற்று வதற்கும்;

(ஒ) கூட்டுத்தாபனத்தினால் பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகளைப் பொதுமக்களுக்கு அறிவிப்பதற்கும்;

(ஓ) தொழினுட்ப மற்றும் நிதிசார் உதவியைப் பெறுவதற்கும் பெற்றுக்கொள்வதற்கும்;

(ஔ) இடப்பரப்பிலுள்ள பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களினதும், திட்டங்களினதும், நிகழ்ச்சித் திட்டங்களினதும் அல்லது செய்திட்டங்களினதும் ஆய்வுகளையும் நடைமுறைப்படுத்துகையையும் நிறைவேற்றுவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உடனுழைப்பைப் பெறுவதற்கும்;

(க) எவையேனும் பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களையும், திட்டங்களையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் அல்லது செய்திட்டங்களையும் கையேற்பதற்கும், பேணுவதற்கும், தொழிற்படுத்து வதற்கும் அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சை, திணைக்களத்தை, மாகாணசபையை, மாகாண அமைச்சை மற்றும் திணைக்களத்தையும் உள்ளூரதிகார சபையையும் அத்துடன் வேறு ஆட்களையும் அல்லது ஆட்கள் குழுவையும் கோருவதற்கும்;

(ங) அவசியமாகக்கூடியவாறாகக் கூட்டுத்தாபனத்தின் பிரிவுகளைத் தாபிப்பதற்கும்;

(ச) இடப்பரப்பின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சியை நிறைவேற்றுவதற்கும்;

(ஞ) இடப்பரப்பினுள்ளான எவையேனும் பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்கள், திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது செய்திட்டங்கள் தொடர்பில் சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கையொன்றைத் தயாரிக்கச் செய்விப்பதற்கும்;

(ட) தாபிப்பதற்கும் தொழிற்படுத்துவதற்கும் தேவைப்பட்ட எல்லா அனுமதிப்புகளுக்காகவும் அனுமதிப்பத்திரங்கள், அங்கீகாரங்கள், உரிமங்கள் மற்றும் வசதிகள் என்பவற்றுக்கான அவர்களின் எல்லா விண்ணப்பங்களையும் நெறிப்படுத்துவதற்கு ஒரு நிறுத்திடக் கூறொன்றைத் தாபிப்பதன்மூலம் வலயமொன்றினுள்ளான பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலய அபிவிருத்தியாளர்களுக்கு மற்றும் தொழில்முயற்சிகளுக்கு வசதியளிப்பதற்கான உதவியை வழங்குவதற்கும் அவசியமாகக்கூடியவாறாக அரசாங்க அல்லது தனியார் உருவகங்களுடன் ஒருங்கிணைவதற்கும்;

(ண) இடப்பரப்பினுள்ளான தனிப்பட்ட தொழில் முயற்சிகளுட்பட, பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயங்களைப் பெயர்குறித்தல், அங்கீகரித்தல், தாபித்தல், தொழிற்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பற்றிய எல்லா அம்சங்கள்மீதுமான கொள்கை விடயங்கள்பற்றி அமைச்சருக்கு விதப்புரைகளைச் செய்வதற்கும்;

(த) பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயங்களினுள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிப்பதன்மூலம் தொழிலுக்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும்;

(ந) பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயத்தை அபிவிருத்தி செய்து முகாமைசெய்யும் நோக்கத்துக்காக அல்லது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் நோக்கத்துக்காகத் தாபிக்கப்பட்ட பகிரங்க தனியார் பங்காண்மை உருவகத்தில் பங்குகளை வைத்திருப்பதற்கும்;

(ப) பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயங்களினுள் கூட்டுத்தாபனத்தினால் அளிக்கப்பட்ட சேவைகளுக்கான விதிப்பனவொன்றை விதிப்பதற்கும் அல்லது அறவிடுவதற்கும்;

(ம) ஒரு பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டத்தை, திட்டத்தை, நிகழ்ச்சித்திட்டத்தை அல்லது செய்திட்டத்தை நிறைவேற்றுவதில் எவரேனுமாளுக்குக் கூட்டுத் தாபனத்தினால் அளிக்கப்பட்ட ஏதேனும் நிதியுதவியின் பயன்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும்;

(ய) எவையேனும் பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களை, திட்டங்களை, நிகழ்ச்சித்திட்டங்களை அல்லது செய்திட்டங்களைநடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான எவையேனும் அலுவலகங்களை, பொறித்தொகுதிகளை, எந்திரத்தொகுதிகளை அல்லது வேறு பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும், கொள்வதற்கும், நிறுவுவதற்கும், பேணுவதற்கும், மீளநிர்மாணிப்பதற்கும் அல்லது இசைவாக்குவதற்கும்;

(ர) ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை எத்தகையதுமான எம்முறையிலேனும் கொள்வதற்கும், வைத்திருப்பதற்கும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுப்பதற்கும் அல்லது கொடுப்பதற்கும், ஈடுவைப்பதற்கும், அடைமானம் வைப்பதற்கும், விற்பனைசெய்வதற்கும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்ப்பதற்கும்; அத்துடன்

(ல) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதன் இடைநேர்விளைவாகவிருக்கக்கூடியவாறான அல்லது உகந்தனவாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் செய்வதற்கும்.

## பாகம் II

### கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை நிருவகித்தலும் முகாமைசெய்தலும்

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களினது நிருவாகமும் முகாமையும் (இதனகத்துப்பின்னர் 'சபை' எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபையொன்றுக்குரித்தாக்கப்படுதல் வேண்டும். கூட்டுத் தாபனத்தின் நிருவாகமும் முகாமையும்.

(2) சபையானது, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் கூட்டுத் தாபனத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும், புரிதலும் வேண்டும்.

**6**. சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:- சபையின் அமைப்பு.

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது-

(i) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அலுவலரொருவராகவுள்ள அவரது பிரதிநிதி;

(ii) தெற்கு அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது மேலதிகச் செயலாளர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அவரது பிரதிநிதி;

(iii) 1979ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் 3ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் துறைமுக

அதிகாரசபையின் தவிசாளர் அல்லது மேல் சொல்லப்பட்ட சட்டத்தின் 5(1)(அ) என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களி லிருந்து அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பணிப்பாளரொருவர்; அத்துடன்

(iv) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையின் தவிசாளர்;

(ஆ) (இதனகத்துப்பின்னர் 'நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்' எனக் குறிப்பீடு செய்யப்படுபவர்களும்) கல்விசார் அல்லது உயர்தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருக்கவேண்டியவர்களும் மற்றும் பொருளியல், நிதி, முகாமைத்துவம், நிருவாகம் அல்லது சட்டம் என்ற துறைகளில் அனுபவம் வாய்ந்தவர்களாகவிருக்க வேண்டியவர்களுமான வேறு நான்கு உறுப்பினர்கள்.

சபையின் தவிசாளர்.

**7.** (1) அமைச்சர், சபையின் தவிசாளராக இருப்பதற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(2) அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் தவிசாளர் தமது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன் அத்தகைய பதவிலகுகையானது எத்தேதியன்று அமைச்சரினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(3) அமைச்சர் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, தவிசாளர் என்ற பதவியிலிருந்து தவிசாளரை அகற்றலாம்.

(4) இரண்டாம், (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலமானது சபையில் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதியாதல் வேண்டும்.

(5) தவிசாளரானவர், சுகவீனம் காரணமாக, வேறு உடற்றகுதியீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக உள்ளவிடத்து, அமைச்சர், நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரென்ற முறையில் அவரது வழமையான கடமைகளுடன் சேர்த்து மேலதிகமாகத் தவிசாளராகச் செயலாற்றுவதற்கு வேறெவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை நியமிக்கலாம்.

*சபையின் உறுப்பினராக விருப்பதற்கான தகைமையீனம்.*

**8**. ஆளொருவர் பின்வருமாறிருப்பின், சபையின் உறுப்பின ரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) அவர், பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினரொருவராகவிருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) அவர், இலங்கைப் பிரசையொருவராக இராதிருந்தால் அல்லது இல்லாதொழிந்தால்;

(இ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப் பட்டால்;

(ஈ) அவர், இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ்கடனிறுக்கவகையற்றவரென அல்லது வங்கிமுறிந்தவரென வெளிப்படுத்தப்பட்டு பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்கவகையற்றவராக அல்லது வங்கிமுறிந்தவராக இருந்தால்;

(உ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத்தீர்ப்பை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்;

(ஊ) அவர், கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதன்சார்பில் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின் கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையைக் கொண்டிருந்தால் அல்லது துய்த்தால்; அல்லது

(எ) அவர், சபையின் உறுப்பினரொருவரென்றமுறையில் அவரது பணிகள் அவரினால் நிறைவேற்றப்படுவதனைப் பங்கமானமுறையில் பாதிக்கக்கூடியவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்.

*உறுப்பினர்களின் பதவிக்காலம்.*

**9**. நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், பதவிவிலகுகையின் மூலம், இறப்பின்மூலம் அல்லது பதவி அகற்றுகையின்மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து ஐந்தாண்டு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்படும் உறுப்பினரொருவர் நீங்கலான அத்தகைய உறுப்பினர், மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

*உறுப்பினர்கள் பதவியிலிருந்து அகற்றப் படுதலும் பதவி விலகுதலும்.*

**10**. (1) நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும் அப்பொருள்பட அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதமொன்றின்மூலம் எந்நேரத்திலும் பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை, அமைச்சரினால் அது எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் சுகவீனம் காரணமாக, உடற்றகுதியீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக உள்ளவிடத்து, அமைச்சர், 6ஆம் பிரிவின் பந்தி (ஆ) வின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரினிடத்திற் செயலாற்றுவதற்கு வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(3) அமைச்சர், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறக்குமிடத்து, பதவிவிலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, அமைச்சர், 6ஆம் பிரிவின் பந்தி (ஆ) வின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரினிடத்தில் வேறோராளை நியமிக்கலாமென்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

*சபையின் கூட்டநடப் பெண்ணும் கூட்டங்களும்.*

**11.** (1) சபையின் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் ஆகக் குறைந்தது ஒரு தடவையேனும் நடாத்தப்படுதல் வேண்டு மென்பதுடன் சபையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் நான்கு உறுப்பினர்களாதலும் வேண்டும்.

(2) தவிசாளர், சபையின் கூட்டம் ஒவ்வொன்றுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகைதராதிருப்பின், சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்கின் மூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர் தமது சொந்த வாக்குடன் சேர்த்து மேலதிகமாக, அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, சபையின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறையைச் சபையானது ஒழுங்குபடுத்தலாம்.

**12.** சபையானது அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பினும் செயலாற்றலாம் என்பதுடன் சபையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றமைகாரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்றமைகாரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக விருத்தலோ அல்லது செல்லுபடியற்றதாகவிருப்பதாகக் கருதப்படுதலோ ஆகாது.

*சபையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள், ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாகச் செல்லுபடி யற்றனவாகக் கருதப்படுத லாகாது.*

**13.** சபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

*சபையின் உறுப்பினர் களுக்கான ஊதியம்.*

**14.** (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, காலத்துக்குக் காலம் சபை முடிபுசெய்யக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாப னத்தின் இலச்சினை.*

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப் படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, சபையின் வலுவளிப்புடனும் சபையின் தவிசாளரினதும் இன்னோர் உறுப்பினரினதும் சமுகத்திலும் தவிர ஏதேனும் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அச்சாசனத்தில் அல்லது ஆவணத்தில் அவர்களின் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்தின் இலச்சினை ஏதேனும் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படும் நேரத்தில் தவிசாளர் சமுகமளிப்பதற்கு இயலாதவராகவுள்ள விடத்து, அதற்கெனத் தவிசாளரினால் எழுத்தில்

அதிகாரமளிக்கப்பட்ட சபையின் வேறெவரேனும் உறுப்பினர், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாட்டுக்கிணங்க அத்தகைய சாசனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவதற்குத் தகுதிவாய்ந்தவராதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எந்தச் சாசனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாசனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றைக் கூட்டுத்தாபனமானது பேணுதல் வேண்டும்.

## பாகம் III

### றுஹுணு அபிவிருத்தி இடப்பரப்பு

**15.** இடப்பரப்பினுள் றுஹுணு பொருளாதார அபிவிருத்தி மீதான தேசியக் கொள்கையானது, மற்றவற்றுக்கிடையில் பின்வருவனமூலம் இலங்கையின் தேசியப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துதல் வேண்டும்:-

*இடப்பரப்பினுள் றுஹுணு பொருளாதார அபிவிருத்தி மீதான தேசியக் கொள்கை.*

(அ) அம்பாந்தோட்டையில் சர்வதேச வான் கடல் ஏற்பாட்டியல் மையமொன்றை அபிவிருத்தி செய்வதன் மூலமும்;

(ஆ) இடப்பரப்பினுள் உலகளாவியரீதியில் போட்டியுள்ள பொருளாதாரச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதன் மூலமும்;

(இ) இலங்கையினுள் கைத்தொழில்களினதும் சேவைகளினதும் பின்தங்கிய இணைப்பை அதிகரிப்பதன்மூலமும்;

(ஈ) பொருளாதார வளர்ச்சிக்கான வினையூக்கியாகப் பொருளாதார அபிவிருத்தி வலயங்களைத் தாபிப்பதன் மூலமும் பெயர்குறிப்பதன்மூலமும்;

(உ) தொழிலை உருவாக்குவதன்மூலமும்; அத்துடன்

(ஊ) தேர்ச்சிபெற்ற வேலைப்படையினரை அபிவிருத்தி செய்வதன்மூலமும்.

றுஹுணு பொருளாதார அபிவிருத்தி இடப்பரப்பு.

**16.** (1) றுஹுணு பொருளாதார அபிவிருத்தி இடப்பரப்பானது, (இச்சட்டத்தில் "இடப்பரப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அம்பாந்தோட்டை, மொனறாகலை, மாத்தறை மற்றும் காலி நிருவாக மாவட்டங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், இடப்பரப்பினுள்ளான ஏதேனும் காணி இடப்பரப்பைப் பொருளாதார அபிவிருத்தி வலயமொன்றாகத் தாபித்து பெயர்குறிக்கலாமென்பதுடன் அத்தகைய அறிவித்தல், அத்தகைய ஒவ்வொரு வலயத்தினுள்ளும் அடங்குகின்ற காணி இடப்பரப்பின் எல்லை வரையறைக்கூறுகளைக் குறித்துரைத்தலும் வேண்டும். அத்தகைய காணி இடப்பரப்பு, கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப் படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அத்தகைய அறிவித்தல் வெளியிடப்பட்டதன்மேல், கூட்டுத்தாபனமானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயத்தைத் தாபிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் பொறுப்பாதல் வேண்டும்.

(4) ஒரு பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயத்தினுள்ளான ஏதேனும் காணி, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காகவும் இச்சட்டத்தின் 18ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்கள், திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது செய்திட்டங்கள் என்பவற்றுக்கிணங்கவும், எவரேனுமாளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்குப் பராதீனப்படுத்தப்படலாம் அல்லது குத்தகைக்குக் கொடுக்கப்படலாம்.

(5) ஏதேனும் எழுத்திலான சட்டத்துக்கமைய, கூட்டுத்தாபன மானது, அத்தகைய பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயத்தின் சுற்றளவுவரை தோதான உட்கட்டமைப்புக்கான அபிவிருத்தியை, தொழிற்பாட்டை மற்றும் பேணுகையை அத்துடன் நிதிசார் உதவியைப் பொறுப்பேற்கலாம்.

(6) பொருளாதார அபிவிருத்தி வலயமானது, தனித்துறை அல்லது பல்துறை வலயமொன்றாகப் பெயர்குறிக்கப்படலாம்; அத்துடன் அது பின்வருவனவற்றை உள்ளடக்கலாம் ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படுதலாகாது:-

(அ) கைத்தொழில்கள்;

(ஆ) பூங்காக்கள்;

(இ) தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் தொழில் முயற்சிகள்;

(ஈ) விஞ்ஞான மற்றும் தொழினுட்பவியல் தொழில் முயற்சிகள்;

(உ) உயர் தொழினுட்பவியல் கமத்தொழில்சார் தொழில் முயற்சிகள்;

(ஊ) சுற்றுலாப்பயணத்துறை மற்றும் பொழுதுபோக்குசார் தொழில்முயற்சிகள்;

(எ) தொழிற் சேவை தொழில்முயற்சிகள்; அல்லது

(ஏ) கால்நடைத் தொழில்முயற்சிகள்.

(7) அரசியலமைப்பினதும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, அமைச்சர் ஏதேனும் அரச காணியைப் பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார வலயமொன்றாக வெளிப்படுத்தலாம் மற்றும் பெயர்குறிக்கலாம். பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயத்தினுள்ளான ஏதேனும் அரச காணி,பெயர் குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயத்தினுள் தாபிக்கப்பட்ட அபிவிருத்தியாளர்களுக்கு, தொழிற் படுத்துநர்களுக்கு அல்லது தொழில்முயற்சிகளுக்கு அல்லது வேறேதேனும் ஆட்கள் குழுவுக்குத்தவிர, தனியார் பாவனைக்காகப் பராதீனப்படுத்தப்படுதலாகாது.

*பொருளாதார அபிவிருத்தி வலயத்தில் உரிமம் தொழிற்படுதல் வேண்டும்.*

**17.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஆளெவரும், இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கிணங்க, கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி, பொருளாதார அபிவிருத்தி வலய அபிவிருத்தியாளரொருவராக, தொழிற்படுத்துநரொருவராக அல்லது தொழில்முயற்சியொன்றாகத் தொழில் கொண்டு நடாத்துதலாகாது அல்லது பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயத்தினுள் செயற்பாடுகளை அல்லது வசதிகளை வழங்குதலோ அல்லது பேணுதலோ ஆகாது.

*பொருளாதார அபிவிருத்திக் கருத் திட்டங்களையும், திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் அல்லது செய் திட்டங்களையும் வகுத்தமைத்தல்.*

**18.** (1) அமைச்சர், றுஹுணு பொருளாதார அபிவிருத்திமீதான தேசியக் கொள்கைக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமான பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களையும்,திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் அல்லது செய்திட்டங்களையும் வகுத்தமைப்பதனைச் செய்வித்தல் வேண்டும்.

(2) அமைச்சர்,பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களையும், திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் அல்லது செய்திட்டங்களையும் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக அனுப்பிவைக்கலாம்.

## பாகம் IV

### கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரும் பணியாட்டொகுதியினரும்

*கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரை நியமித்தல்.*

**19.** (1) சபையானது, அமைச்சரின் கலந்தாலோசனையுடனும் (2)ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட தகைமைகளையும் ஆட்சேர்ப்புத்திட்டத்தையும் கருத்திற்கொண்டும், (இச்சட்டத்தில் "பிநிஅ" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பிரதான நிறைவேற்று அலுவலரொருவரை கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல் வேண்டும்.

(2) சபையானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், பிநி அலுவலரின் பதவிக்கான தகைமைகளையும் ஆட்சேர்ப்புத்திட்டத்தையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) பிநிஅ ஆனவர், சபையின் பொதுவான பணிப்புகளுக்கும் மேற்பார்வைக்கும் அமைய:-

(அ) பணியாட்டொகுதியினரின் நிருவாகமும் கட்டுப்பாடும் உட்பட, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களினது நிருவாகம் பொறுப்பிக்கப்பட்டவராதல் வேண்டும்;

(ஆ) சபையின் எல்லா முடிபுகளினதும் நிறைவேற்றுகைக்காகப் பொறுப்பாதல் வேண்டும்; அத்துடன்

(இ) சபையினால் அவருக்குக் குறித்தளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணிகளையும் நிறைவேற்றுதல் வேண்டும்.

(4) பிநிஅ ஆனவர், சபையின் அங்கீகாரத்துடன், ஏதேனும் கூட்டத்தில் சமூகமளிப்பதற்கும் உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் அத்தகைய கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(5) பிநிஅ ஆனவர், சபையின் அங்கீகாரத்துடன், அவரது தத்துவங்களுள் அல்லது பணிகளுள் எவற்றையும் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலருக்கு எழுத்தில் கையளிக்கலாமென்பதுடன் அத்தகைய ஏதேனும் தத்துவம் அல்லது பணி எந்த அலுவலருக்குக் கையளிக்கப்படுகின்றதோ அந்த அலுவலர், பிநிஅலுவலரின் பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை அல்லது பணியைப் பிரயோகித்தலும் அல்லது புரிதலும் வேண்டும்.

(6) சபையானது, பிநி அலுவலரைப் பின்வரும் சந்தர்ப்பங்களில் பதவியிலிருந்து அகற்றலாம்:-

(அ) தமது கடமைகளைப் புரிவதற்கு அவர் நிரந்தரமாக இயலாதவராக வந்தால்;

(ஆ) சபையின் அபிப்பிராயத்தில், மோசடியான அல்லது சட்டவிரோதமான இயல்பினதான அல்லது சபையின் அக்கறைகளுக்குப் பங்கம் விளைவிப்பதாகவுள்ள ஏதேனும் செயலைச் செய்திருந்தால்; அல்லது

(இ) சபையினால் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கியொழுகத் தவறியிருந்தால்.

கூட்டுத்தாபனத்தின் பணியாட் தொகுதியினர்.

**20.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனமானது, அதன் தத்துவங்களையும், பணிகளையும் வினைத்திறனாகப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய ஊழியர்களை நியமிக்கலாம்.

(2) சபையானது, சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வருவனவற்றுக்கான தத்துவத்தையுடையதாதல் வேண்டும்:-

(அ) கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும் அவர்களைப் பதவியிலிருந்து விலக்குவதற்கும்;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களினது சேவை நியதி நிபந்தனைகளைத் தீர்மானிப்பதற்கும்; அத்துடன்

(இ) அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அத்தகைய ஊழியர்களுக்கு எந்த வீதங்களில் ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமோ அந்த வீதங்களை நிர்ணயிப்பதற்கும்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா ஊழியர்களும், தொழிலுக் கமர்த்தப்பட்டதிலிருந்து ஒருமாதத்தினுள், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களும் கொடுக்கல்வாங்கல்களும் தொடர்பில் அவர்களின் நெருங்கிய உறவினர்களின் அக்கறைகளுட்பட அவர்களது தனிப்பட்ட நேரடியான அல்லது நேரடியானதல்லாத அக்கறையை, அல்லது எந்தக் கரிசனைகளில் அத்தகைய ஊழியர் கணிசமானளவு அக்கறையைக் கொண்டுள்ளாரோ அந்தக் கரிசனைகளைக் கூட்டுத்தாபனத்துக்கு எழுத்தில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

பகிரங்க அலுவலர்களைக் கூட்டுத்தாபனத்தின் பணியாட் தொகுதிக்கு நியமித்தல்.

**21.** (1) சபையின் வேண்டுகோளின் பேரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அந்த அலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குக் கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஏதேனும் உடன்படிக்கையின்கீழ் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காக அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள எவரேனுமாளைச் சபையானது தொழிலுக் கமர்த்துமிடத்து, அவ்வாளினால் கூட்டுத்தாபனத்துக்கான ஏதேனும் சேவைக் காலப்பகுதியானது அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) சபையின் வேண்டுகோளின்பேரில், உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் வேறெவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், விடயத்துக்கேற்ப, அத்தகைய உறுப்பினரினதும், அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் மற்றும் உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவினதும் அல்லது உள்ளூரதிகாரசபையினதும் சம்மதத்துடன் அதேபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குக் கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது சபையினாலும் உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவினாலும் அல்லது அந்த உள்ளூரதிகார சபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறாக ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் (5)ஆம் உட்பிரிவின் கீழ் கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அவர், அத்தகைய பணியாட்டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

*பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல்.*

**22.** (1) சபையின் வேண்டுகோளின் பேரில் ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளுகின்ற சபையினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குக் கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் சபையினாலும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளுகின்ற சபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறாக ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட அத்தகைய நியதிநிபந்தனைகளின் மீது கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) எவரேனுமாள் தற்காலிகமாகவேனும் அல்லது நிரந்தரமாகவேனும் (1)ஆம்உட்பிரிவின்கீழ் கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுமிடத்து, பணியாட்டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினரைப்போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அவர் அமைந்தவராதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் தொடர்பாக, ''ஆளுகின்ற சபை'' என்பது, அந்தப் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் நிருவாகம் மற்றும் முகாமை எந்தப் பணிப்பாளர் சபைக்கு அல்லது வேறு குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதோ அந்தப் பணிப்பாளர் சபை அல்லது வேறு குழு என்று பொருளாகும்.

## பாகம் V

### நிதியம்

**23.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். பின்வருவன கூட்டுத்தாபனத்தின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்:- கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

(அ) கூட்டுத்தாபனத்தின் பாவனைக்காகப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக் கூடியவாறான எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, எத்தகையனவுமான எம்மூலங்களிலிருந்தேனும் கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையாகக் கூட்டுத்தாபனத்தினாற் பெறப்படக் கூடியவாறான எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) கூட்டுத்தாபனத்தினால் அளிக்கப்பட்ட சேவைகளுக்காகக் கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்.

(2) கூட்டுத்தாபனமானது, இச்சட்டத்தின் கீழான அதன் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்படும் செலவினங்களைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**24.** (1) அரசியலமைப்பினதும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனமானது, அதன் தத்துவங்களுள், பணிகளுள் மற்றும் கடமைகளுள் எவற்றையும் பிரயோகிக்கின்ற, புரிகின்ற மற்றும் நிறைவேற்றுகின்ற நோக்கத்துக்காக, அமைச்சரின் முன்னங்கீகாரத்துடன் ஏதேனும் திணைக்களத்துக்கு, மாகாணசபைக்கு, மாகாண அமைச்சுக்கு மற்றும் திணைக்களத்துக்கு, உள்ளூரதிகாரசபைக்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு நிதிகளைக் குறித்தொதுக்கலாம். நிதிகளைக் குறித் தொதுக்குதல்.

(2) அத்தகைய தத்துவங்களை, பணிகளை மற்றும் கடமைகளைப் பிரயோகித்தலும், புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும், அது தொடர்பாக உறப்பட்ட செலவினத்துக்கான கணக்கைச் சமர்ப்பித்தலும், அத்தகைய திணைக்களத்தின், மாகாணசபையின், மாகாண அமைச்சின் மற்றும் திணைக்களத்தின், உள்ளூரதிகாரசபையின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் கடமையாதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் கீழ் எந்தத் திணைக்களத்துக்கு, மாகாணசபைக்கு, மாகாண அமைச்சுக்கு மற்றும் திணைக்களத்துக்கு, உள்ளூரதிகாரசபைக்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு நிதிகள் குறித்தொதுக்கப்பட்டுள்ளனவோ அந்த ஏதேனும் திணைக்களத்தை, மாகாணசபையை, மாகாணஅமைச்சை மற்றும் திணைக்களத்தை, உள்ளூரதிகார சபையை அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தை, அத்தகைய நிதிகளின் செலவினம் தொடர்பில் கூட்டுத்தாபனத்தினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய தகவல்களைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்துவதற்குக் கூட்டுத்தாபனம் உரித்துடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய திணைக்களத்தின், மாகாணசபையின், மாகாண அமைச்சின் மற்றும் திணைக்களத்தின், உள்ளூரதிகாரசபையின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் கடமையாதலும் வேண்டும்.

*நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.*

**25.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கணக்குகளின் கணக்காய்வு தொடர்பாக அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், கூட்டுத்தாபனத்தின் கணக்குகளைக் கணக்காய்வுசெய்தல் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) அமைச்சரின் அங்கீகாரத்துடன் கூட்டுத்தாபனமானது, நிதியத்திலிருந்து எவையேனும் பணங்களை மீளப்பெறுதல் தொடர்பான விதிகளை ஆக்குவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விதிகளுக்கிணங்கவன்றி, பணத்தொகையெதுவும் நிதியத்திலிருந்து மீளப் பெறப்படுதலுமாகாது.

## பாகம் VI

### பொது

காணியை அல்லது அதன்மீதான அக்கறையைக் கொள்ளுதல்.

**26.** (1) இடப்பரப்பினுள்ளான ஏதேனும் காணி அல்லது ஏதேனும் காணியிலான ஏதேனும் அக்கறை, கூட்டுத்தாபனத்தினால் அதன் நோக்கங்களுள் எவற்றுக்காகவும் தேவைப்படுமிடத்தும், அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் உத்தேசிக்கப்பட்ட கொள்ளுதலை அங்கீகரிக்குமிடத்தும், காணியானது அல்லது ஏதேனும் காணியிலான அக்கறையானது, ஒரு பகிரங்க நோக்கத்துக்காகத் தேவைப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்கக் காணிகொள்ளுதற் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டு கூட்டுத்தாபனத்துக்குக் கைமாற்றவும்படலாம்.

(2) இச்சட்டத்தின்கீழ் பொருளாதார அபிவிருத்தி வலயமொன்றைத் தாபிக்கும் நோக்கத்துக்காகத் தேவைப்பட்ட காணியானது அல்லது அதன்மீதான அக்கறையானது ஒரு பகிரங்க நோக்கமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இடப்பரப்பினுள்ளான ஏதேனும் காணி அல்லது ஏதேனும் காணியிலான ஏதேனும் அக்கறை, கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் நோக்கத்துக்காகக் காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் கொள்ளப்படவுள்ள மற்றும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியினுள் எந்நேரத்திலும் அத்தகைய காணியை அல்லது அதன்மீதான அக்கறையைக் கொள்வனவு செய்வதற்கான உட்கருத்துப்பற்றிய பகிரங்க அறிவித்தல் அச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வெளியிடப்படும் ஏதேனும் விடயத்தில், அச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அக்காணி அல்லது அதன்மீதான அக்கறை தொடர்பில் செலுத்தப்படவேண்டிய நட்டஈட்டுத் தொகையைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காகப் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) காணியானது கொள்ளப்படும் நேரத்தில் இருக்கின்றவாறான அதே நிலைமையில் அது அப்போது இருந்திருப்பின், காணியின் சந்தைப் பெறுமதியானது, அத்தகைய கட்டளைத்

தேதிக்குப்பின்னர் அத்தகைய காணிக்குச் செய்யப்பட்ட நல்லெண்ணத்துடனான சீராக்கல்கள் எவையேனுமிருப்பின் அவை காரணமாக ஒரு நியாயமான தொகையினால் அதிகரிக்கப்பட்டதும், அத்தகைய கட்டளைத் தேதியன்று அது கொண்டிருந்திருக்கக் கூடியதுமான சந்தைப்பெறுமதியாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய கட்டளைத்தேதியில் காணியின் சந்தைப்பெறுமதியை நிச்சயிப்பதில், இச்சட்டத்தினைப் பின்பற்றிக் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் அபிவிருத்திப் பணியிலிருந்து அல்லது வேறு தொழிற்பாட்டிலிருந்து திரண்டிருக்கக்கூடிய ஏதேனும் நன்மை அல்லது பெறுமதியிலான அதிகரிப்பு அல்லது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் திரளக் கூடிய நன்மையின் அல்லது பெறுமதியிலான அதிகரிப்பின் எதிர்பார்ப்பு, கணக்குக்கெடுக்கப் படுதலாகாது.

**27**. (1) இடப்பரப்பில் அமைந்துள்ளவையும் 1978ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபைக்குரித்தாக்கப் பட்டவையுமான காணிகள், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்பட்டனவாதல் வேண்டும். *காணிகள் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.*

(2) இலங்கை முதலீட்டுச் சபையானது, அத்தகைய காணியைக் கூட்டுத்தாபனத்துக்குக் கைமாற்றுவதற்கு அவசியமான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

**28**. அரசியலமைப்பினதும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தினால் முறியிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட எவ்விவரணத்தினவையுமான எல்லாப் பண்டங்களும், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அத்தகைய விலக்களிப்பை அமைச்சர் அங்கீகரிப்பின், சுங்கத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். *சுங்கத் தீர்வை முதலிய வற்றிலிருந்து விலக்களித்தல்.*

கூட்டுத்தாபனத்தினால் திரட்டப்பட்ட கடன்கள்.

**29**. (1) அரசாங்கமானது, அது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளின் மீது, அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் உள்நாட்டு, சர்வதேச அல்லது வெளிநாட்டு ஒழுங்கமைப்பிடமிருந்து கூட்டுத்தாபனத்தினால் திரட்டப்பட்ட கடன்களுக்கு உத்தரவாதமளிக்கலாம். இவ்வுட்பிரிவின் கீழ் உத்தரவாதமளிக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கடன்கள், வெளிநாட்டு நாணயத்தில் குறித்துக்காட்டப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட ஏதேனும் உத்தரவாதத்தின் கீழ் அரசாங்கத்தினால் செலுத்தப் படற்பாலனவான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் திரட்டுநிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகையவொரு கடன்தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படற்பாலனவான எல்லாப் பணத்தொகைகளும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், -

(அ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன்கீழ் விதிக்கப்பட்ட எவையேனும் வரிகள், தீர்வைகள் அல்லது கட்டணங்கள் என்பவற்றுக்கான கழிப்பனவின்றியும், அவற்றிலிருந்து விடுபட்டன வாகவும்; அத்துடன்

(ஆ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன்கீழ் விதிக்கப்பட்ட எல்லா மட்டுப்பாடு களிலிருந்தும் விடுபட்டனவாகவும்,

செலுத்தப்படலாம்:

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், ஏதேனும் சர்வதேச அல்லது வெளிநாட்டு ஒழுங்கமைப்புத்தவிர ஏதேனும் முறியை அல்லது வாக்குறுதிப் பத்திரத்தை வைத்திருப்பவருக்கு அதன்கீழான செலுத்துகைகளின் மேல், அத்தகைய முறி அல்லது வாக்குறுதிப்பத்திரம் இலங்கையில் வதிகின்ற ஆள் ஒருவரினால் பயன்பெறும்வகையில் சொந்தமாக வைத்திருக்கப்படும்போது, எவையேனும் வரிகளுக்கு, தீர்வைகளுக்கு, கட்டணங்களுக்கு அல்லது மட்டுப்பாடுகளுக்கு ஏற்புடையனவாதலாகாது.

(4) மூன்றாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, ஆளொருவர் இலங்கையில் வதிகின்றாரா அல்லாரா என்ற கேள்வி, 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தைப் பின்பற்றி அரசாங்கத்துக்கும் ஏதேனும் சர்வதேச அல்லது வெளிநாட்டு ஒழுங்கமைப்புக்கும் இடையேயான ஒவ்வோர் உத்தரவாத உடன்படிக்கையும் அத்தகைய ஏதேனும் உத்தரவாத உடன்படிக்கையைப் பின்பற்றி அரசாங்கத்தினால் அளிக்கப்பட்ட ஒவ்வோர் உத்தரவாதமும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அவற்றின் முறையான நியதிநிபந்தனைகளுக்கிணங்கச் செல்லுபடியானவையாகவும் வலுவுறுத்தப்படற்பாலவையாகவும் இருத்தல் வேண்டும்.

(6) அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு அரசாங்கத்தினால் உத்தரவாதமளிக்கப்பட்ட ஏதேனும் உள்நாட்டு, சர்வதேச அல்லது வெளிநாட்டு ஒழுங்கமைப்பினால் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்ட ஏதேனும் கடனின் விடயத்தில், அக்கடனானது எந்த நாணயத்தில் அல்லது நாணயங்களில் வெளிப்படுத்தப்படுகின்றதோ அந்த நாணயம் அல்லது நாணயங்கள் தொடர்பாக ரூபாவின் ஏதேனும் மீள்பெறுமதிமதிப்பீட்டிலிருந்து விளைகின்ற ஏதேனும் நட்டத்தை அரசாங்கம் செலுத்துதலும் ஏதேனும் இலாபத்துக்கு உரித்துடையதாதலும் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒவ்வொரு நட்டத்தொகையும் திரட்டு நிதியத்துக்குப் பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(7) அமைச்சர் அல்லது அதற்கென அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள், அவரது கைப்பட்ட சாதனத்தின்மூலம், அரசாங்கத்துக்கும் ஏதேனும் உள்நாட்டு, சர்வதேச அல்லது வெளிநாட்டு ஒழுங்கமைப்புக்கும் இடையேயான ஏதேனும் உத்தரவாத உடன்படிக்கையைக் கையொப்பமிடுவதற்கு அரசாங்கத்தின் சார்பில் இத்தால் தத்துவமளிக்கப்படுகின்றார்.

நிதிசார் ஊக்குவிப்புக்களும் ஏனைய விலக்களிப்புகளும் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

**30.** அமைச்சர், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன், எழுத்திலான சட்டத்திற்கிணங்க ஏதேனும் வகுதியினரான முதலீட்டாளருக்குக் கிடைக்கக் கூடியனவான நிதிசார் ஊக்குவிப்புக்களையும் ஏனைய விலக்களிப்புக்களையும், ஊக்குவிப்புக்களைப் பிரயோகிக்கும் மற்றும் அளிக்கும் முறையையும் விதித்துரைக்கலாம்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் கையளித்தல்.

**31.** (1) கூட்டுத்தாபனமானது, எழுத்திற் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, இச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகளுள் எவற்றையும் சபையின் தவிசாளருக்கு அல்லது உறுப்பினருக்கு அல்லது பிரதான நிறைவேற்று அலுவலருக்குக் கையளிக்கலாமென்பதுடன் தவிசாளர் அல்லது அத்தகைய உறுப்பினர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சபையினால் வழங்கப்பட்ட எவையேனும் விசேடமான அல்லது பொதுவான பணிப்புகளுக்கமைய, அத்தகைய தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகித்தலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், கூட்டுத்தாபனமானது, அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

அமைச்சரின் பணிப்புகள்.

**32.** அமைச்சர், காலத்துக்குக்காலம், இச்சட்டத்தின்கீழான தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பாகச் சபைக்கு அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை வழங்கலாமென்பதுடன் அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் சபையின் கடமையாதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பணிப்புகள்.

**33.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவசியமெனக் கூட்டுத்தாபனம் கருதுமிடத்து, கூட்டுத்தாபனமானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன், பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயங்கள் தொடர்பாக, ஏதேனும்

திணைக்களத்துக்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு, கூட்டுத்தாபனம் தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டம், திட்டம், நிகழ்ச்சித்திட்டம் அல்லது செய்திட்டம் தொடர்பான அத்தகைய பணிகளை அல்லது கடமைகளைப் புரியும்படி அல்லது நிறைவேற்றும்படி அத்தகைய ஏதேனும் திணைக்களத்தை அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தைத் தேவைப்படுத்துகின்ற விசேடமான அல்லது பொதுவான பணிப்புகளை விடுக்கலாம்.

(2) அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் அத்திணைக்களத்தின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் கடமையாதல் வேண்டும்.

(3) எந்தத் திணைக்களத்துக்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பணிப்பு விடுக்கப்படுகின்றதோ அந்தத் திணைக்களம் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம், அத்தகைய பணிப்புடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் கூட்டுத்தாபனத்தின் மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைந்ததாதல் வேண்டும்.

ஒழுங்கேற்பாடுகளும் ஒப்பந்தங்களும்.

**34.** கூட்டுத்தாபனமானது, அதன் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும்,பிரயோகிக்கும்,புரியும் மற்றும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக, அமைச்சு, திணைக்களம், மாகாணசபை, மாகாண அமைச்சு மற்றும் திணைக்களம் அத்துடன் உள்ளூரதிகாரசபை என்பவற்றுடன் மற்றும் கூட்டுமுயற்சிகளுட்பட, தனிப்பட்ட அல்லது பகிரங்கமானவேறு ஆட்களுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் ஒழுங்கேற்பாடுகளைச் செய்யலாம் அல்லது ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளலாம்.

கூட்டுத்தாபனத்தின் சார்பில் செயலாற்றுதல்.

**35.** கூட்டுத்தாபனமானது, அமைச்சரின் அங்கீகாரத்துடனும் அதன் இலச்சினையின்கீழான எழுத்திலும்,இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் இடத்தில் கூட்டுத்தாபனத்துக்காகவும் அதன் சார்பிலும் செயலாற்றுவதற்கு, ஒன்றில் பொதுவாக அல்லது ஏதேனும் குறிப்பிட்ட கருமம் தொடர்பில் எவரேனுமாளுக்குத் தத்துவமளிக்கலாம்.

சபையின் எல்லா உறுப்பினர்கள் முதலியவர்களும் பகிரங்க சேவை யாளர்களாகக் கருதப்படுதல்.

**36.** சபையின் எல்லா உறுப்பினர்களும், கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், சேவையாளர்கள் மற்றும் முகவர்கள் என்போரும், (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கத்துக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்.

**37.** கூட்டுத்தாபனமானது, (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்திற்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

செலவுகள் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**38.** (1) கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் சபையின் உறுப்பினரொருவரினால், கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரினால் அல்லது எவரேனும் ஊழியரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் அத்தகைய ஆளினால் அல்லது அவருக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

**39.** (1) அமைச்சர், கூட்டுத்தாபனத்தின் கலந்தாலோசனையுடன், விதித்துரைக்கப்படவேண்டிய கருமங்கள் தொடர்பில் அல்லது இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1)ஆம் உட்பிரிவினால் அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் அமைச்சர் இப்பிரிவின்கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) பெயர்குறிக்கப்பட்ட ஒவ்வொரு பொருளாதார அபிவிருத்தி வலயம் தொடர்பிலும் பொருளாதார அபிவிருத்தி வலய அபிவிருத்தியாளர்களுக்கு உரிமமளித்தல் எம்முறையில் செய்யப்படவேண்டுமோ அம்முறை;

(ஆ) பொருளாதார அபிவிருத்தி வலய அபிவிருத்தி யாளர்களுக்கும் தொழிற்படுத்துநர்களுக்குமான தகைமைகள்;

(இ) ஓர் உரிமத்தின் நியதிகளும் நிபந்தனைகளும்;

(ஈ) பெயர்குறிக்கப்பட்ட ஒரு பொருளாதார அபிவிருத்தி வலயத்தினுள்ளான வசதிகள்;

(உ) பெயர்குறிக்கப்பட்ட ஒரு பொருளாதார அபிவிருத்தி வலய அபிவிருத்தியாளரினதும் தொழிற்படுத்து நரினதும் உரிமைகளும் கடப்பாடுகளும்;

(ஊ) பெயர்குறிக்கப்பட்ட ஒரு பொருளாதார அபிவிருத்தி வலயத்தில் தொழிற்படுவதற்கு உரிமமளிக்கப்பட்ட தொழில்முயற்சிகளின் உரிமைகளும் கடப்பாடுகளும்;

(எ) பெயர்குறிக்கப்பட்ட ஒரு பொருளாதார அபிவிருத்தி வலயத்தில் தாபிக்கப்படவேண்டிய கைத்தொழில் மற்றும் வர்த்தக ஒழுங்கமைப்புகளின் வகுதிகள்;

(ஏ) பொருளாதார அபிவிருத்தி வலய அபிவிருத்தியாளர் களுக்குப் பொருளாதார அபிவிருத்தி வலயங்களாகத் தாபிக்கப்பட்டுள்ளவையும் கிடைக்கக்கூடியவையுமான காணி இடப்பரப்புக்களை அடையாளங்காணல், நிலப்படம்வரைதல் மற்றும் அவசியமானவிடத்து பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான எவையேனும் கருமங்கள்; அத்துடன்

(ஐ) பொதுவாக, பெயர்குறிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயங்களின் அபிவிருத்தி, முகாமை மற்றும் கட்டுப்பாட்டு நோக்கத்துக்காக.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்றுமாதக்காலப்பகுதியொன்றினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப் படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**40.** (1) எக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம் தொடர்பிலும் கூட்டுத்தாபனம் விதிகளை ஆக்கலாம். விதிகள்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்; அத்துடன் அது, அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

பொருள்கோடல்.

**41.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய —

''அபிவிருத்திக் கருத்திட்டம்'' என்பது, இடப்பரப்பில் உற்பத்தியை, வருமானத்தை, தொழிலைத் தோற்றுவிக்கின்ற அல்லது பொருளாதார, சமூக அல்லது சூழல்சார் நிலைமைமைளைச் சீராக்குகின்ற ஏதேனும் பகிரங்க அல்லது தனியார் செயற்பாடு என்று பொருளாகும்;

"சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கை" என்பது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க,தேசிய சூழல் சட்டத்தினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்டவாறான அதே பொருளையுடைய தாதல் வேண்டும்;

''உள்ளூரதிகாரசபை'' என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை மற்றும் பிரதேசசபை என்று பொருளாகும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட மற்றும் நிறை வேற்றப்பட்ட தத்துவங்களுக்கும், கடமைகளுக்கும், பணிகளுக்கும் நேரொத்ததாகவுள்ள அல்லது அவற்றையொத்த தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**42.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.